வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 14.5.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- ஜுன் 1-ஆம் தேதி நடைபெற உள்ள, 7-ஆவது மற்றும் இறுதி கட்ட மக்களவைத் தேர்தலில், வேட்பு மனு தாக்கல் இன்றுடன் முடிவடைந்துள்ளது
- மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று, உத்தரபிரதேஷ் மாநிலம் வாரணாசி மக்களவைத் தொகுதியில், வேட்பு மனு தாக்கல் செய்தார்
- இந்தியாவில் உள்நாட்டு அளவிலான நிலக்கரி கையிருப்பு இவ்வாண்டில்,149 மில்லியன் டன்னாக, 26 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் இவ்வாண்டு 11-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், தேர்ச்சி விகிதம் 97.75 சதவிகிதமாக உள்ளது.

ஏழாம் கட்டம்

7 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 57 தொகுதிகளில், ஜுன் 1-ஆம் தேதி நடைபெற உள்ள, 7-ஆவது மற்றும் இறுதி கட்ட மக்களவைத் தேர்தலில், வேட்பு மனு தாக்கல் இன்றுடன் முடிவடைந்துள்ளது. கடைசி நாளான இன்று, மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி, உத்தரபிரதேஷ் மாநிலம் வாரணாசி தொகுதியில், வேட்பு மனு தாக்கல் செய்தார். வாரணாசியில், கங்கை நதியில் புனித நீராடி, கால பைரவரை வழிபட்ட பின்னர், அவர் வேட்பு மனு தாக்கலுக்கு சென்ற போது, பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா, மற்றும், திரு ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மூத்த தலைவர்களும், திரு சந்திரபாபு

நாயுடு, திரு ஏக்நாத் ஷிண்டே, திரு ஜித்தன்ராம் மாஞ்சி, திரு ராம்தாஸ் அதவாலே உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்களும் உடன் இருந்தனர். பண்டிட் ஞானேஸ்வர் சாஸ்திரி, திரு லால்சந்த் குஷ்வாஹா உள்ளிட்ட நால்வர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் வேட்பு மனுவை முன் மொழிந்தனர். 2014- மற்றும் 2019-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது வாரணாசி தொகுதியில், திரு நரேந்திர மோடிக்கு எதிராக, காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்த திரு அஜய் ராய், இம்முறையும், எதிர்கட்சிகளின் இண்டி கூட்டணி வேட்பாளராக போட்டியிடுகிறார்.

__*நான்காம் கட்டம்*__

9 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 96 தொகுதிகளில், நேற்று நடைபெற்ற நான்காம் கட்ட மக்களவை தேர்தலில், 67.71 சதவிகித வாக்குகள் பதிவாகி இருப்பதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. நான்காம் கட்ட மக்களவை தேர்தலுடன் சேர்த்து நேற்று, சட்டமன்ற தேர்தலும் நடைபெற்ற ஆந்திரப் பிரதேசத்தில், 78.25 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன. பீகாரில் மக்களவை தேர்தல் நடைபெற்ற தொகுதிகளில் 57.06 சதவிகித வாக்குகளும், தெலங்கானாவில் 64.93, ஜார்கண்டில் 65.31, மத்திய பிரதேசத்தில் 70.98, உத்தரபிரதேசத்தில் 58.05, ஒடிசாவில் 73.97, மற்றும் மேற்குவங்கத்தில் 78.44 சதவிகித வாக்குகளும் பதிவாயின. ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகர் மக்களவைத் தொகுதியில் இம்முறை 37.98 சதவிகித வாக்குகள் பதிவாகி இருப்பதாகவும், இது, கடந்த பல பத்தாண்டுகளில் காணாத உயரளவு என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. நேற்றைய 4-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து இதுவரை, 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 379 மக்களவைத் தொகுதிகளில் தேர்தல் முடிவடைந்துள்ளது.

**உத்தரபிரதேசம்**

ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தலின் ஒரு பகுதியாக, உத்தரபிரதேசத்தில், வரும் 20-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் ஒன்றான அமேதியில், பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். காங்கிரஸ் பொது செயலர் திருமதி பிரியங்கா வாத்ராவும் அமேதி தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இன்று, கோரக்பூர், மகாராஜ்கஞ்ச் ஆகிய இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். லக்னோ தொகுதியில் மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு அகிலேஷ்யாதவ் ஜலான் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

**அமித் ஷா**

மேற்கு வங்கத்தில் வரும் 20-ஆம் தேதி மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் ஒன்றான பாங்காம் தொகுதியில், மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா, இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். தொடர்ந்து உலுபேரியா மக்களவைத் தொகுதியிலும் அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இதற்கிடையே, பீகாரில் காங்கிரஸ், ஆர்ஜேடி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். முன்னாள் துணை முதலமைச்சர் சுசில்குமார் மோடி மறைவு காரணமாக பீகாரில் மூத்த பிஜேபி தலைவர்கள் பலர் இன்று தங்களின் தேர்தல் பிரச்சார திட்டங்களை ரத்து செய்து இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

## டெல்லி

மத்தியில் ஆளும் பிஜேபி, எதிர்கட்சிகளுக்கு எதிராக புலனாய்வு அமைப்புகளை பயன்படுத்துவதாக குற்றம் சாட்டி, டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி பிரச்சார இயக்கம் ஒன்றை தொடக்கி உள்ளது. எதிர்கட்சி தலைவர்கள் பிஜேபியில் சேர்ந்து விட்டால் ஊழல் குற்றச்சாட்டுக்கள் காணாமல் போய்விடுவதாக மூத்த ஆம் ஆத்மி தலைவர் திரு கோபால்ராய், இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். இதற்கிடையே மூத்த காங்கிரஸ் தலைவர் திரு அனில் பரத்வாஜ் புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் நாட்டில் பொருளாதார வளர்ச்சி என்பது, குறிப்பிட்ட வர்த்தக குழுமங்களின் ஏகபோகமாகவே திகழ்வதால் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார். இதற்கிடையே, டெல்லியை சேர்ந்த பல்வேறு காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி தலைவர்கள், டெல்லி பிஜேபி தலைவர் திரு வீரேந்திர சச்தேவா முன்னிலையில், இன்று பாரதிய ஜனதாவில் இணைந்துள்ளனர்.

## பசுமை-ஹைட்ரஜன்

நெதர்லாந்து நாட்டின் ராட்டர்டேம் நகரில் தற்போது நடைபெறும் உலக ஹைட்ரஜன் உச்சி மாநாட்டில் முதல் முறையாக இந்தியா அரங்கு ஒன்றை அமைத்துள்ளது. இந்த அரங்கை மத்திய அரசின் புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறை செயலர் திரு பூபேந்தர் பல்லா தொடக்கி வைத்தார். பசுமை ஹைட்ரஜன் துறையில் இந்தியா எட்டியுள்ள முன்னேற்றங்களை எடுத்துக் கூறும் வகையில் இந்த அரங்கு அமைந்துள்ளது. இவ்வாண்டு உலக ஹைட்ரஜன் உச்சி மாநாட்டில் பல்வேறு நாடுகளில் இருந்து சுமார் 15 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள். இந்தியாவில் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கப்பட்டதும், நாட்டின் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி திறனை, 2030-ஆம் ஆண்டிற்குள்

5 மில்லியன் டன்னாக உயர்த்த, இந்த இயக்கத்தின் கீழ் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

***நிலக்கரி***

இந்தியாவில் உள்நாட்டு அளவிலான நிலக்கரி கையிருப்பு இவ்வாண்டில்,149 மில்லியன் டன்னாக, 26 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டின் நிலக்கரி உற்பத்தி, 7.31 சதவிகிதம் அதிகரித்துள்ளது. அனல்மின் நிலையங்களுக்கு அனுப்பப்படும் நிலக்கரியின் அளவும், கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு 5.43 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக, மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். வரும் ஜுன் மாதத்தில், நாட்டின் உச்சகட்ட மின்சாரத் தேவை, 235 முதல், 240 கிகாவாட் வரை அதிகரிக்கும் என்றாலும், இதை சமாளிக்க நாடு முற்றிலும் தயார் நிலையில் இருப்பதாகவும் அமைச்சர் கூறி உள்ளார்.

***பிளஸ்***

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் கடந்த மார்ச் மாதம் 11-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய, 7 ஆயிரத்து 610 மாணவ-மாணவிகளில், 3 ஆயிரத்து 667 மாணவிகள் உட்பட, 7 ஆயிரத்து 439 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அனைத்து பள்ளிகளின் ஒட்டு மொத்த தேர்ச்சி விகிதம், 97.75 சதவிகிதமாக உள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் மொத்தம் உள்ள 100 பள்ளிகளில், 53 பள்ளிகள் 100 சதவிகிதம் தேர்ச்சி விகிதம் காட்டி உள்ளன. கணிதம், கணிப்பொறி அறிவியல், இயற்பியல், வணிகவியல் உள்ளிட்ட பாடங்களில், மொத்தம் 179 மாணவ-மாணவியர் 100-க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர். புதுச்சேரியில் அரசுப் பள்ளி மாணவர்கள், இக்கல்வியாண்டில், சிபிஎஸ்இ பாடத் திட்டத்தில் இணைந்ததால் தமிழ்நாடு பாடத் திட்டத்தில் பொது தேர்வு எழுதவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

_**தெருநாய்**_

உழவர்கரை நகராட்சிப் பகுதிகளில், தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும், ராபிஸ் தடுப்பூசி போடவும், தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி இந்திய விலங்குகள் நல வாரியத்திடம் திட்ட அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது. திட்ட அங்கீகாரச் சான்றிதழ் கிடைத்தவுடன், தெருநாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி போடும் பணிகள், சில மாதங்களில் மீண்டும் தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அரசு சாரா நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த இப்பணிகள், விலங்குகள் நல வாரியத்திடம் திட்ட அங்கீகாரம் பெறுவதற்காக, வாரியத்தின் அறிவுறுத்தலின் பேரில் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

_**ஆம்புலன்ஸ்-விபத்து**_

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் இன்று, கடும் மழையினால் ஆம்புலன்ஸ் வாகனம் நிலை தடுமாறி, மின்சாரக் கம்பத்தில் மோதித் தீப் பிடித்ததில், அதில் இருந்த 57 வயது பெண் நோயாளி ஒருவர் உடல் கருகி உயிர் இழந்தார். நோயாளிக்கு துணையாக ஆம்புலன்ஸ் வண்டியில் பயணித்த ஒரு டாக்டர் உட்பட வேறு 6 பேர், இன்று விபத்தில் காயம் அடைந்தனர்.

_**கலாச்சாரம்**_

ஆசியா-பசிபிக் பிராந்தியத்தின் தொன்மையான இலக்கியங்கள் பற்றிய, யுனெஸ்கோ ஞாபகப் பதிவேட்டில், இந்தியாவின் ராம்சரித மானஸ், பஞ்ச தந்திரம் உள்ளிட்ட 3 பண்டைய இலக்கியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டின் வளமான இலக்கிய மரபுகளையும், கலாச்சார பாரம்பரியத்தையும் உறுதிப்படுத்தும் வகையிலான இந்த முடிவு, நாட்டிற்கே பெருமிதமான தருணம் என்று, மத்திய கலாச்சார அமைச்சகம்

தெரிவித்துள்ளது. தொன்மையான இலக்கியங்களை இவ்வாறு அங்கீகரிப்பதால், படைப்பாளிகளின் படைப்புத் திறனை கொண்டாடவும், காலம் கடந்து நிற்கும் இந்த இலக்கியங்களின் ஆழமான விவேகத்தை அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லவும் ஏதுவாகும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. ராம்சரித மானஸ் உட்பட இந்தியாவில் 3 பண்டைய இலக்கியங்களுக்கு யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்றுத் தருவதில் புதுடெல்லியில் உள்ள இந்திராகாந்தி தேசிய கலை மையம் முக்கிய பங்காற்றி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்றும், நாளையும், தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, நெல்லை, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 20-ஆம் தேதி வரை தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த 5 நாட்களுக்கு தமிழகத்தின் உள்மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக குறையக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 2 நாட்களுக்கு உள்மாவட்டங்கள், கடலோர மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், அதிகபட்ச வெப்பநிலை, பொதுவாக இயல்பை ஒட்டியே அமையும், என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் தென்தமிழகத்தின் அநேக இடங்களிலும் வடதமிழகத்தின் உள்மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலம் மழை பெய்துள்ளது.

**ஐபிஎல்**

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு புதுடெல்லியில் நடைபெறும் போட்டியில், டெல்லி-லக்னோ அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு அகமதாபாத்தில், கொல்கத்தா-குஜராத் அணிகளுக்கு இடையிலான போட்டி, மழையினால், ஒரு பந்து கூட வீசாமல் கைவிடப்பட்டது.

**கென்யா-உதவி**

கிழக்கு ஆப்பிரிக்க நாடான கென்யாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, மேலும் 40 லட்சம் டன் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் இதர நிவாரணப் பொருட்களை, இந்தியா அனுப்பி வைத்துள்ளது. இந்திய விமானப் படையின் விமானம் மூலம் கென்யாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்த 2-ஆம் கட்ட மனிதாபிமான உதவிகளில், போர்வைகள், கூடாரப் பொருட்கள், மற்றும், விஷக்கடி மருந்துகளும் அடங்கும். ஏற்கனவே உணவு உட்பட இந்தியாவின் முதல் கட்ட மனிதாபின உதவிகள், கடந்த 10-ஆம் தேதி, ஐஎன்எஸ் சுமேதா கடற்படை கப்பல் மூலம், கென்யாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.